


# வேலை அமைப்புக்களில் கோவிட் - 19 பரவலுக்குத் தயாராதல் மற்றும் எதிர்வினையாற்றுதல் தொடர்பான செயற்பாட்டு வழிகாட்டல்கள்

## இடைக்கால வழிகாட்டல்

2020 ஏப்ரல் 17

சுற்றாடல் சுகாதாரம், தொழில் சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு தொடர்பான பணிப்பாளர் சபை
சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

# வேலை அமைப்புக்களில் கோவிட் - 19 பரவலுக்குத் தயாராதல் மற்றும் எதிர்வினையாற்றுதல் தொடர்பான செயற்பாட்டு வழிகாட்டல்கள்

## இடைக்கால வழிகாட்டல்

**2020** ஏப்ரல் **17**

சுற்றாடல் சுகாதாரம், தொழில் சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு தொடர்பான
பணிப்பாளர் சபை

# ஆசிரியர் குழு

## பிரதம ஆசிரியர்

வைத்தியர் அனில் ஜயசிங்க அவர்கள்
சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்

## ஆசிரியர்கள்

வைத்தியர் எல்.ரீ. கம்லத் அவர்கள்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (சுற்றாடல் தொழில் சுகாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு), சுகாதார அமைச்சு

வைத்தியர் வீ.ரீ.எஸ்.கே. சிறிவர்தன அவர்கள்
பணிப்பாளர் (சுற்றாடல் தொழில் சுகாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு), சுகாதார அமைச்சு

வைத்தியர் இனோகா சுரவீர அவர்கள்
சமூக மருத்துவ ஆலோசகர், சுற்றாடல் சுகாதாரம், தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பணிப்பாளர் சபை, சுகாதார அமைச்சு

வைத்தியர் தீபிகா ஹேரத் அவர்கள்
பதிவாளர், சுற்றாடல் சுகாதாரம், தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பணிப்பாளர் சபை, சுகாதார அமைச்சு

வைத்தியர் நிரோஷினீ அதிகாரம் அவர்கள்
பதிவாளர், சுற்றாடல் சுகாதாரம், தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பணிப்பாளர் சபை, சுகாதார அமைச்சு

வைத்தியர் குமுது வீரகோன் அவர்கள்
பதிவாளர், சுற்றாடல் சுகாதாரம், தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பணிப்பாளர் சபை, சுகாதார அமைச்சு

## பங்களிப்பு

வைத்தியர் மஞ்சுளா தனன்சூரிய அவர்கள்
தேசிய தொழில்சார் அதிகாரி, உலக சுகாதார அமைப்பு

பேராசிரியர் ஜகத் பிரேமசந்திர அவர்கள்
இரசயான மற்றும் செயன்முறைப் பொறியியல் திணைக்களம், மொறட்டுவ பல்கலைக்கழகம்

கலாநிதி ஏ.ஜீ.ரீ சுகதபால அவர்கள்
சிரேஷ்ட விரிவுரையாளர், இயந்திரப் பொறியியல் திணைக்களம், மொறட்டுவ பல்கலைக்கழகம்

ருவன் குமார அவர்கள்
உணவுக் கைத்தொழில்

*இந்த ஆவணத்தை அச்சிடுவதற்கு இலங்கை கணக்காளர் சேவை சங்கம் அனுசரணை வழங்கியுள்ளது*

# முன்னுரை

கோவிட் - 19 எனப் பொதுவாக அழைக்கப்படும் புதிய கொரோனா வைரஸ் காரணமாக ஏற்பட்ட தொற்றுநோயினால் தற்போது முழு உலகும் பாதிக்கப்பட்டுள்ளது. வைரஸின் பெயர் மூலம் வெளிப்படுத்தப்படுவது போன்று இந்த வைரஸ் உலகிற்குப் புதிய ஒன்றாகும். தற்போதைய ஆய்வுகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையிலேயே அது தொடர்பான அறிவு உள்ளது. எவ்வாறாயினும், அது 3% மரண வீதத்துடன், தொடுகை மூலம் பெரும்பாலும் தொற்றுவதாக அறியப்பட்டுள்ளதுடன், அது அனைத்து நகரங்களை மாத்திரமன்றி நாடுகளையும் முழுமையாக தனிமைப்படுத்துவதற்கு அல்லது முழுமையாக மூடுவதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

மார்ச் மாதம் நடுப்பகுதியிலிருந்து நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியமை மூலம் இலங்கையும் இதனையொத்த நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளது. எவ்வாறாயினும் நாட்டிலுள்ள அதிகாரிகள் காலத்திற்கு ஏற்ற வகையில் மேற்கொள்ளும் மிகவும் கடுமையான நடவடிக்கைகள் காரணமாக ஒரு மாத காலமாக கோவிட் - 19 தொற்றுடைய நோயாளிகளின் அதிகரிப்பு கட்டுப்பாட்டு நிலையில் உள்ளதாகத் தெரிகிறது.

கோவிட் - 19 தொற்றுநோய் உலகளாவிய ரீதியில் குறிப்பிடத்தக்க பொருளாதார தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது தெளிவானது. இலங்கையிலும் அதே நிலைமையே காணப்படுகிறது. இது குறுகிய காலத்தில் மாத்திரமன்றி நீண்ட காலத்திலும் பாதகமான சுகாதார, சமூக, பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும்.

எவ்வாறாயினும், கோவிட் ரைவஸ் பரவல் நிலைக்கு எதிராகப் போராடுவதற்கும், இலங்கையில் பாதகமான நீண்ட கால மற்றும் நடுத்தரக் கால சமூக, பொருளாதார விளைவுகள் ஏற்படுவதைக் குறைப்பதற்காகவும் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அவ்வாறான நிலைமையில் மூடிய வேலைத்தளங்களில் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த காலத்தில் இலங்கை பெரும்பாலான தொற்றுநோய்களை ஒழித்த பலமான, வினைத்திறன்மிக்க, பயனுறுதி வாய்ந்த சுகாதாரக் கட்டமைப்பைக் கொண்டுள்ள நாடு என்பது உலகளவில் பிரபலமானதாகும். எனவே கோவிட் - 19 இன் இந்த சவாலை சிறப்பாக எதிர்கொள்ள முடியும் எனவும், எமது மக்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடியும் எனவும் நம்புகிறேன்.

தற்போதைய நிலைமையில், பணிகளை ஆரம்பித்தவுடன் சேவை நிலையங்களில் கோவிட் - 19 தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக சேவை நிலையங்களில் சேவை ஒழுங்குகள் மற்றும் சேவைச் சூழல்களை மாற்றியமைப்பது அவசியமானதாகும். எனவே, அனைத்து சேவை நிலையங்களிலும் பின்பற்றுவதற்காக சுகாதாரத் துறையின் அனுபவங்கள் மற்றும் ஏனைய அனைத்து நிபுணர்கள் மற்றும் தரப்பினருடன் இணைந்து சுகாதார அமைச்சினால் இந்த வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த நோயை எமது நாட்டிலிருந்து ஒழிப்பதற்கான எமது குறிக்கோளை அடைந்துகொள்வதற்காக இந்த வழிகாட்டல்களைக் கடுமையாகப் பின்பற்றுமாறு நான் ஏற்புடைய அனைத்து அமைப்புகளிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

**வைத்தியர் அனில் ஜயசிங்க**
சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்

# உள்ளடக்கம்


| அத்தியாயம் | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | **05** |
| 2. | பரவ முடியுமான முறைமைகள் | **06** |
| 3. | பொது வழிகாட்டல்கள் | **07** |
| 4. | விசேட வழிகாட்டல்கள் | **15** |
| | 4.1 உற்பத்திக் கைத்தொழில்கள் | 15 |
| | 4.2 அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் | 15 |
| | 4.3 உபசரணைத் துறை | 16 |
| | 4.4 உணவு விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 19 |
| | 4.5 பல்பொருள் பேரங்காடிகள் | 20 |
| | 4.6 பொதுப் போக்குவரத்து | 20 |
| | 4.7 உபசரணை நிகழ்வுகள் | 22 |
| | 4.8 பொருளாதார மத்திய நிலையங்கள் | 23 |
| | 4.9 பல்கலைக்கழகங்கள் | 24 |
| **5.** | தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ள பொதுச் செயற்பாடுகள் | 25 |
| **இணைப்பு** | இணைப்பு **01** – சுகாதாரப் பாதுகாப்புத் தீர்வொன்றைத் தயாரிக்கும் முறை | 26 |
| | இணைப்பு **02 -** சுகாதார வைத்திய அதிகாரிகளின் பட்டியல் - அவர்களின் மாவட்ட, மாகாண மட்ட மேற்பார்வை அதிகாரிகளுடன் | 27 |

# 1. அறிமுகம்

கோவிட் - 19 என்பது ஒரு சுவாச நோயாகும். அது உலக சுகாதார அமைப்பினால் தொற்றுநோயாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இலங்கையில் சிறியளவிலான நோயாளிகள் கண்டறியப்பட்ட போதிலும், கடந்த மாதத்தில் 200 க்கு மேற்பட்ட நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். தற்போது நிலைமை சிறப்பாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதிகாரிகள் இதனை ஒழிப்பதற்கான மூலோபாயங்களை வகுத்து வருகின்றனர். எனவே கிட்டிய எதிர்காலத்தில் சேவை நிலையங்களை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பின்னணியில், சேவை நிலையங்கள் மற்றும் ஏனைய பொது வசதிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விசேட முன் பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியமாகும்.

இந்த ஆவணத்தில் கோவிட் - 19 தொற்று பரவுவதைத் தடுத்தல்/ கட்டுப்படுத்துவதற்கு சேவை நிலையங்களிலும் ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இதனூடாக பல்வேறுபட்ட சேவை நிலையங்கள் மற்றும் அமைப்புகளில் கருத்திற்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய மேலதிக முன்பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த படிமுறைகளை எளிதாகவும், இலகுவாகவும் பின்பற்ற முடியும். எனினும் கோவிட – 19 தொற்று தொடர்பாக சமகால அறிவியல் சான்றுகள் உலகிற்குப் புதிது என்பதால், அந்த சான்றுகளின் வரையறுத்த தன்மையைக் கருத்திற்கொள்ள வேண்டும். தற்போது காணப்படும் சான்றுகளைக் கருத்திற்கொண்டு இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக புதிய தகவல்கள் கிடைத்த பின்பு, அதற்கேற்ற வகையில் மாற்றங்கள் செய்யப்படும்.

சேவை நிலையமொன்று அதிகளவானோர் எப்போதும் சமூகமளிப்பதன் காரணமாக, சேவை நிலையங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும்.

ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கும் இந்த வழிகாட்டல்களைச் செயற்படுத்தும் பொறுப்பு காணப்படுவதுடன், தொழிநுட்ப வழிகாட்டல் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில் சுகாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு) அலகு மற்றும் வெளிப்புற மட்டத்தில் சுகாதார மருத்துவ அதிகாரிகளினால் வழங்கப்படும். இந்த ஆவணத்தின் இறுதியில் அனைத்து அதிகாரிகளையும் தொடர்புகொள்வதற்கான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆசியர்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு அனைத்து பொது வேலை அமைப்புகளையும் இந்த ஆவணத்தில் உள்ளடக்கியுள்ளனர். எனினும் தெரிவுசெய்யப்பட்ட அமைப்புகளில் எல்லா வேலையினையும், எல்லா செயற்பாட்டினையும் உள்ளடக்க முடியாது.எனவே வாசகர்கள் இந்த ஆவணத்திலுள்ள முக்கிய செய்திகளை உள்வாங்கி, அவர்களது வேலை அமைப்புகளுக்கு ஏற்புடைய வகையில் அவற்றை ஏற்புடைத்தாக ஆக்கிக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

கோவிட் – 19 பரவல் மூன்று வழிமுறைகளில் மாத்திரம் இடம்பெறுகின்றமையினால், அடுத்த பந்தியில் விளக்கப்பட்டுள்ள எண்ணக்கருக்கள் ஊடாக அவ்வாறான பரவுதல்களைத் தடுப்பதற்கு தனியான சேவை நிலையங்களுக்குப் பொருந்தக்கூடிய சிறந்த ஒழுங்குமுறைகளைப் பின்பற்ற முடியும். இந்த நோய்ப் பரவலைத் தடுப்பதில் தனிநபர் நடத்தையும் முக்கியமானதாகும். முகக் கவசங்களை அணிதல் மற்றும் முகத்தை தொடுவதைத் தவிர்ந்து கொள்ளுதல் எனும் எளிய இரண்டு செயற்பாடுகள் மூலம் எந்தவொரு நபருக்கும் இந்த நோய்த் தொற்றலைத் தடுத்துக்கொள்ள முடியும்.

# 2. வேலை அமைப்புகளில் பரவ முடியுமான முறைமைகள்

பின்வரும் 3 முறைமைகள் ஊடாக நோய் பரவ முடியும்.
.

**சிறு நீர்மத் துளி ஊடாக** – தொற்றுடைய சிறு நீர்மத் துளியை சுவாசிப்பதன் மூலம் வைரஸ் பரவ முடியும். இருமல் அல்லது தும்மலின்போது அல்லது தொற்றுடைய நபர்கள் சுவாசிப்பதன் ஊடாகவும் வைரஸ் நீர்மத் துளி உருவாகலாம். இந்த வைரஸ் நீர்மத் துளிகளுக்கு 1 மீட்டர் தூரம் பயணிக்க முடியும்.

**நேரடியாக** – தொற்றுடைய நபரொருவருடன் நேரடியாகத் தொடர்புறுவதன் மூலம் ஒரு நபரிடமிருந்து இன்னொரு நபருக்குப் பரவுதல். (உதா – கட்டியணைத்தல், கைகுழுக்குதல்). மூக்கு, வாய் அல்லது கண் ஊடாக வைரஸ் உடம்பினுள் நுழைய முடியும்.

**மறைமுகமாக** – தொற்றுடைய நபரொருவருக்கு இருமல், தும்மல் ஏற்படுதல் அல்லது சுவாசிக்கும்போது, தொற்றுடைய திரவ நீர்மத் துளிகள் சூழலுக்கு வெளியாக்கப்பட்டு, சுற்றிலும் உள்ள மேற்பரப்புகள் மற்றும் பொருட்களான எழுதும் மேசைகள், மேசைகள், தொலைபேசி, கணனி போன்றவற்றின் மீது அந்த நீர்மத் துளி படிந்து அந்த மேற்பரப்புகளை மாசடையச் செய்யலாம். தொற்று இல்லாத நபரொருவர் அந்த மேற்பரப்புக்களைத் தொட்டு விட்டு அவரின் கண்கள், மூக்கு அல்லது வாயைத் தொடுவதன் மூலம் வைரஸ் தொற்ற முடியும்.

# 3. பொதுவான தடுப்பு வழிமுறைகள்

இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் பெரும்பாலான வேலை அமைப்புக்களுக்கு ஏற்புடையனவாகும். கோவிட் - 19 தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு அனைத்து ஊழியர்களும் பணியமர்த்துவோரும் இந்த விதந்துரைகளைப் பின்பற்ற வேண்டும்.

## 3.1 சேவை நிலையங்களில் கோவிட் - 19 க்குத் தயாராவதற்கான, எதிர்வினையாற்றுவதற்கான திட்டம்

ஊழியர்களின் தொழில் வெளிப்பாட்டு மட்டம், இந்த வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர் அபாயக் காரணிகள் மற்றும் விதந்துரைத்துள்ள ஏனைய ஒழுங்குமுறைகளைக் கருத்திற்கொண்டு; கோவிட் - 19 க்குத் தயாராவதற்கான திட்டமொன்றைத் தயாரிக்குமாறு அனைத்து பணியமர்த்துவோருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது. இதனூடாக தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு/ கட்டுப்படுத்துவதற்கு மாத்திரமன்றி, சந்தேகத்திற்கிடமான சம்பவமொன்று வெளிப்படுத்தப்படின், ஏற்படும் அச்சங்கள் தவிர்க்கப்படும்.

வேலைத்தளங்கள் மற்றும் அந்த வேலைத்தள ஊழியர்கள் தமது தொழிலுக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளும் பணிகள் தொடர்பான அபாய மட்டத்தை இந்த திட்டத்தில் கருத்திற்கொள்ள வேண்டும். அவ்வாறான கருத்திற்கொள்ளுதலின்போது பின்வரும் விடயங்கள் உள்ளடங்க முடியும்:

- ஊழியர்கள் கோவிட் - 19 இன் எந்த தோற்றுவாய்களுக்கு, எங்கே, எவ்வாறு வெளிப்படுத்தப்பட முடியும்? என்பது தொடர்பாக,
  - பொதுமக்கள், கொடுக்கல் வாங்கல் செய்வோர் மற்றும் உதவியாளர்கள்; மற்றும்
  - நோயுள்ள நபர்கள் அல்லது விசேடமாக தொற்று ஏற்படுவதற்கான அதிக ஆபத்தைக் கொண்டுள்ள ஆட்கள் (உதா – விரிவாக, நிலைபேறா (தொடர்ச்சியாக) கோவிட் - 19 பரவலைக் கொண்ட இடங்களுக்குச் சென்ற சர்வதேச பிரயாணிகள்
- வீட்டில் மற்றும் சமூக அமைப்புகளில் தொழில்சாராத அபாயமுடைய காரணிகள்
- ஊழியர்களின் தனிநபர் அபாயமுடைய காரணிகள் (உதா- முதிய வயது, நாட்பட்ட மருத்துவ நிலைமைகள் காணப்படுதல், நோய் எதிர்ப்பாற்றல் குறைந்த நிலைமைகள், கர்ப்பந் தரித்திருத்தல், புகைபிடிப்போர்)
- அந்த அபாயங்களைத் தடுப்பதற்கான கட்டுப்பாடுகள்.

அனைத்து சேவை நிலையங்களும் கோவிட் - 19 தொற்றுக்கு எதிராக செயற்படுத்தப்படும் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளைக் கண்காணிக்கும்போது, விசாரிக்கும்போது தேவையான வழிகாட்டலுக்கு, பொருத்தமான மையப்புள்ளியை (தாதியொருவர், பாதுகாப்பு அதிகாரியொருவர், மனித வள முகாமையாளரொருவர் அல்லது பதவிக்குப் பொருத்தமான பொறுப்பான ஒருவர் எனக் கண்டறியப்பட்ட அதிகாரியொருவரை) இனங்காண வேண்டும்.

கோவிட் - 19 தொற்றுடையவர் என சந்தேகப்படும் ஊழியர்களை அனுப்புவதற்கு, சேவை நிலையத்தில் குளியலறையொன்று/ மலசலகூடமொன்றுடன் கூடிய விசேட தனிப்படுத்திய அறையொன்றை முன்கூட்டியே இனங்காண வேண்டும். அது தேவையானபோது தொற்றுநீக்கம் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

## 3.2 பின்வரும் பிரிவில் உள்ளடங்கும் ஊழியர்கள் சேவைக்கு சமூகமளித்தல் கூடாது.

- இருமல், மூக்கு வடிதல், தொண்டை நோவு மற்றும்/ அல்லது மூச்சுத் திணறல் போன்ற கடுமையான ஆரம்ப சுவாச நோய் அறிகுறிகளுடன் அல்லது அறிகுறிகளின்றி காய்ச்சலுக்கான அறிகுறிகளையுடைய நபர்கள்,
- கடந்த 14 நாட்களினுள் கோவிட் - 19 தொடர்பாக சந்தேகத்திற்குரிய அல்லது உறுதிப்படுத்தப்பட்ட சம்பமொன்றுடன் தொடர்புகளைப் பேணிய நபர்கள்.
- கோவிட் - 19 க்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்கள்.

சுகவீனமுற்ற நபரொருவர் சேவைக்கு சமூகமளித்தால் அவரை உடனடியாக வீட்டுக் திருப்பியனுப்புவதனை பணியமர்த்துவோர் உறுதிப்படுத்த வேண்டும். அந்த நபருக்கு கோவிட் - 19 தொற்று ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் ஏற்படின் கீழே. 3.6 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள படிமுறைகளைப் பின்பற்றவும்.

வளாகத்தினுள் நுழையும் அனைவரும் (விருந்தினர், பணியாட்தொகுதி) நுழைவதற்கு முன்னர் சவர்க்காரம் மற்றும் நீரைக் கொண்டு தமது கைகளைக் கழுவ வேண்டும். (காலினால் இயக்கப்படும் குழாய் நீரே கழுவுவதற்குப் பயன்படுத்தப்படும் தொட்டிக்குப் பொருத்தமானதாகும்). மாற்றீடாக அற்ககோல் கொண்ட திரவமொன்றைக் கை கழுவுவதற்கு (குறைந்தபட்சம் 70% v / v அற்ககோல்) பயன்படுத்தலாம். கூடங்களைத் தொற்றுநீக்குவது விதந்துரைக்கப்படவில்லை.

விரல் பதிவியந்திரத்தைப் பயன்படுத்திய பின்பு கை கழுவுவதற்கு சுகாதாரப் பாதுகாப்புத் திரவங்களைப் பயன்படுத்தவும். ஒவ்வொரு சேவை நேர மாற்றத்திற்கு முன்னரும் பின்னரும் விரல் பதிவியந்திரத்தை தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.

வளாகத்தில் நுழையும்போது பாதங்களைக் கழுவுதல் (0.1% சோடியம் ஹைபொகுளோரைட்டுத் தீர்வு கொண்ட) அல்லது நுழைவு வாயிலில் பாதணிகளை அகற்றுதல் மற்றும் வளாகத்தினுள் பயன்படுத்துவதற்காக தனியான பாதணிகளை வழங்குவது மேலதிக மாற்று நடவடிக்கைகள் ஆகும்.

சேவை நிலையத்தினுள் நுழையும்போது அனைத்து ஊழியர்களினதும் உடல் வெப்பநிலையைப் பரிசோதிக்கவும். 98.4 $^{0}$F அல்லது 37 $^{0}$C க்கு மேற்பட்ட வெப்பநிலையைப் பதிவுசெய்யும் எந்தவொரு நபரையும் 10-15 நிமிட இடைவேளையின் பின்பு மீண்டும் பரிசோதிக்க வேண்டும் என்பதுடன், இரண்டாவது முறை பரிசோதிக்கும்போது நேர்மறையாக இருப்பின் அவர் திருப்பி அனுப்பிவைக்கப்படுவார். வெப்பநிலையைப் பரீட்சிக்கும் கருவி மருத்துவ தரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் ஊழியர்கள் மத்தியில் ஒரு மீட்டர் இடைவெளிைப் பேணவும். (வேலை செய்யும்போது, கூட்டங்களின்போது, சிற்றுண்டிச்சாலை போன்ற இடங்களில்)

அனைத்து ஊழியர்களும் கடமையில் ஈடுபடும்போது முகக் கவசங்களை முறையாக அணிய வேண்டும்.

முகக் கவசத்தினை அல்லது முகத்தினைத் தொடுவதைத் தவிர்ந்துகொள்ள வேண்டும். முகக் கவசங்களை அகற்றிய பின்பு அவற்றைக்

காலினால் திறக்க முடியுமான மூடிய தொட்டியொன்றினுள் இட வேண்டும். பின்பு இரு கைகளையும் கழுவ வேண்டும்.

முகக் கவசங்களை அகற்றும்போது கைகளைக் குறைந்தளவே பயன்படுத்த வேண்டும். எல்லா சந்தர்ப்பங்களிலும் முகத்தைத் தொடுவதைத் தவிர்ந்துகொள்ளவும்.

இருமலின் போது, தும்மலின் போது வாயை மூடுவது உள்ளிட்ட சுவாச ஒழுக்கங்களை ஊக்குவிக்கவும். இருமலின் போது அல்லது தும்மலின் போது முழங்கை அல்லது கையின் கீழ் உட்பகுதியினால் மறைக்க வேண்டும். இவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் மூக்கு/ வாயை மூடுவதற்கு திசுவொன்றைப் பயன்படுத்த முடியும் என்பதுடன், அந்த திசுவை அகற்றும்போது மூடிய தொட்டியொன்றில் இட்டு விட்டு கைகளைக் கழுவிக்கொள்ள முடியும்.

முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் ஏனைய ஊழியர்களின் கையடக்கத் தொலைபேசிகள், பேனைகள், ஏனைய பொதுத் தொலைபேசிகள், பெக்ஸ் இயந்திரங்கள், மேசைகள் அல்லது ஏனைய சேவைக் கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்துகொள்ளுமாறு ஊழியர்களை அறிவுறுத்தவும். ஏதாவது பொருளொன்று மாற்றிக்கொள்ளப்பட்டிருப்பின் அதனை சவர்க்காரம் மற்றும் நீரைக் கொண்டு அல்லது குறைந்தபட்சம் 70% v / v அற்ககோல் உள்ளடங்கிய சுகாதாரப் பாதுகாப்புத் திரவத்தைக் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

உதவியாளர்களுடன் நேரடி வாய் மூலமான தொடர்பாடலைக் குறைக்குமாறு பணியாட்தொகுதிக்கு அறிவுறுத்தல் வழங்குவதுடன், ஊழியர்கள் பணியாட்தொகுதி அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு மாற்று வழிமுறைகளைப் (பொதுவான அழைப்பு அமைப்பு, உள்ளக தொலைபேசி நீட்டிப்புகள் போன்ற) பயன்படுத்தவும்.

தவிர்ப்பதற்காக பிரிவுகளுக்கிடையே கதவுகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும்.

ஊழியர்கள் கைகுழுக்குதல்/ கட்டியணைத்தல் போன்றவற்றைச் செய்யாமலிருக்க அறிவுறுத்துவதுடன், வாழ்த்துவதற்கு தொடுகை இடம்பெறாமல் வேறு முறைமைகளைப் பின்பற்றவும்.

பின்வரும் விடயங்களைப் பின்பற்றுவதன் மூலம் சிறந்த தனிப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பை பேணிச் செல்வதற்கு ஊழியர்களை ஊக்குவிக்கவும்.

- சமநிலையான உணவுகளைப் பெற்றுக்கொள்ளுதல்
- சுத்தமான நீரைப் போதியளவு அருந்துதல்
- நாளாந்தம் உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல்
- புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற சுகாதாரமற்ற பழக்கங்களைத் தவிர்ந்துகொள்ளுதல்

## 3.3 மேற்பரப்புகளை சுத்தப்படுத்தல் மற்றும் தொற்றுநீக்கம் செய்தல்

வேலை செய்யும் சூழலை எப்போதும் கூட்டி சுத்தப்படுத்தல், மேற்பரப்புகள், உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்களை சுத்தப்படுத்தல் மற்றும் தொற்றுநீக்கம் செய்தல் உட்பட உட்புற சுத்திகரிப்பு ஒழுங்குகளை எப்போதும் பேணிச் செல்ல வேண்டும்.

ஈரமான தூசி / ஈரத் துடைப்பு அல்லது சவர்க்காரம் மற்றும் நீரைப் பயன்படுத்தி கழுவுதல் அல்லது சலவைப் பொருட்களைப் பயன்படுத்தி துப்புரவு செய்த பின்பு,

அனைத்து உலோக மேற்பரப்புகளையும் குறைந்தபட்சம் 70% v / v கொண்ட அற்ககோல் தீர்வினைப் பயன்படுத்தி தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.

அனைத்து உலோகமல்லாத மேற்பரப்புகளையும் 0.1% சோடியம் ஹைபொகுளோரைட்டுத் தீர்வினைப் பயன்படுத்தி தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.

அனைத்து சேவை நேர மாற்றத்திற்கு முன்னரும் பின்னரும் மற்றும் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருமுறை கதவுகள் / கைப்பிடிகளை சுத்தம் செய்து தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். தளங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் குறைந்தபட்சம் ஒரு நாளில் இரு தடவைகள் தொற்றுதடைப் பொருட்களைக் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். (அல்லது சேவை நேர மாற்றக் கடமைகள் உள்ள இடங்களில் எல்லா சேவை நேர மாற்றத்தின் பின்னரும்)

நீள்வரித் துண்டு திரைச்சீலைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதுடன், அவை அத்தியாவசியமாக இருப்பின் மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு ஒரு நாளில் 3 தடவைகள் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.

## 3.4 எந்தவொரு சேவைக் கருமபீடத்திலும் பணியாற்றும் பணியாட்தொகுதிக்கான அறிவுறுத்தல்கள்

எல்லா சந்தர்ப்பங்களிலும் முகக் கவசத்தை அணியவும். (முகக் கவசத்தைப் பாதுகாப்பாகவும், முறையாகவும் அணிய வேண்டும் என்பதுடன், அதனை அகற்றும் வரை அதனைத் தொட வேண்டாம்)

கொடுக்கல் வாங்கல் செய்பவரிலிருந்து குறைந்தபட்சம் ஒரு மீட்டர் தூர இடைவெளியைப் பேணவும். இல்லாவிடின் மாற்றீடாக கருமபீடத்திற்கு முன்பாக இருண்ட / கண்ணாடி / பிளாஸ்டிக் கவசத்தைப் பயன்படுத்தி நிலத்தில் இடமொன்றை அமைத்து கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளவும்.

பணத்தைக் குறைந்தளவே பயன்படுத்த வேண்டும். (கடனட்டை / பற்று அட்டையைக் கோரவும்). கடனட்டை / பற்று அட்டையைப் பயன்படுத்தும்போது அதனை வாடிக்கையாளருக்கே இயந்திரத்தின் உட்செலுத்துமாறும், அதனை இயந்திரத்திலிருந்து அகற்றிக்கொள்ளுமாறும் கோரவும்.

கருமபீடத்தில் உள்ள அலுவலர் ஆவணங்களில் கையொப்பமிடுவதற்குப் பயன்படுத்தியை பேனைகளை மாற்றிக்கொள்ளக் கூடாது. (வாடிக்கையாளர் தனது பேனையைப் பயன்படுத்த வேண்டும்). கொடுக்கல் வாங்கல் செய்பவர் பேனையொன்றை எடுத்துச் செல்லாவிடின் அவருக்கு காசாளரின் பேனையைப் பயன்படுத்த முடியும் என்பதுடன், அப்போது அதனை உடனடியாக தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்).

அற்ககோல் / கை சுகாதார சுத்தப்படுத்தல் திரவமொன்றைப் பக்கத்தில் வைத்திருக்கவும். (கருமபீடத்தில் ஒரு நபருக்கு ஒன்று வீதம்) முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் அதனைப் பயன்படுத்தவும். இல்லாவிடின் மாற்றீடாக கையுறைகளைப் பயன்படுத்தவும். (கையுறைகளை ஒருபோதும் மீண்டும் பயன்படுத்தக் கூடாது என்பதுடன் சேவை நேர மாற்றத்தின்போது மூடிய தொட்டியொன்றினுள் இட வேண்டும்.

## 3.5 உணவு அறைகள் மற்றும் சிற்றுண்டியகங்களுக்கான வழிகாட்டல்

சிற்றுண்டியகத்தில் அதிகளவானோர் நடமாடுவதைத் தடுப்பதற்கு பகலுணவு மற்றும் தேநீர் இடைவேளையைக் குழுரீதியாக வழங்க வேண்டும்.

சிற்றுண்டியகத்தில் நபர்களிடையே குறைந்தபட்சம் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேண வேண்டும் என்பதுடன், அதனை ஊக்குவிக்கும் வகையில் தளபாடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.

உணவு அருந்தும்போது கண்ணாடிக் குவளைகள், பீங்கான்கள், ஏனைய பாத்திரங்களைப் பரிமாறிக் கொள்வதனைத் தவிர்க்கவும்.

புபே பாணியில் வழங்கப்படும் உணவுகள் / பான வகைகளை அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நபரே வழங்க வேண்டும். குறுக்கு மாசுக்கு வழிவகுப்பதால் வாடிக்கையாளர்கள் தாமாக பரிமாறிக்கொள்ள இடமளித்தல் கூடாது.

## 3.6 ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதி

ஊழியர்களுக்குப் போக்குவரத்து வசதி வழங்குவதாயின், பின்வரும் விசேட தற்காப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

குறுக்கு மாசடைதலைத் தவிர்ப்பதற்காக பயணிகளை அழைத்துச் செல்ல முன்பு வாகனங்களை சுத்தம் செய்து தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். (இருக்கைகள், அனைத்து கைப்பிடிகள், உள்ளக கதவு, யன்னல், பூட்டுகள், வெளிப்புற கதவு கைப்பிடி, கம்பம் போன்றவை).

வாகனத்தினுள் அமர்ந்த பின்பு அவர்களுக்கிடையில் குறைந்தபட்சம் 1 மீட்டர் இடைவெளியைப் பேணும் வகையில் ஊழியர் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருத்தமான ஆசனக் கொள்திறன் கொண்ட வாகனமொன்றைப் பயன்படுத்தவும்.

பயணிகளுக்காக வாகனத்தில் கதவுகளைத் திறப்பதற்கும் மூடுவதற்கும்

அதில் சேவையாற்ற பெயரிடப்பட்ட அலுவலர் ஒருவர் வருகை தந்திருக்க வேண்டும். பயணிகள் கதவுகளை திறத்தல் மற்றும் மூடுவதை விட்டும் தவிர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

அனைத்து ஊழியர்களும் பயணத்தின்போது முகக் கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

## 3.7 சேவை நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான நிகழ்வொன்று வெளிப்படுத்தப்படும்போது அதற்கான விசேட அறிவுறுத்தல்கள்

சேவை நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான நிகழ்வொன்று வெளிப்படுத்தப்படின், 1390 அழைப்பு இலக்கம் ஊடாக உதவியைப் பெற்று வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். இல்லாவிடின் ஊழியரை காவு வண்டி மூலம் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கவும். 1990 ஐ அழைப்பதன் மூலம் சுவசெரிய காவு வண்டிச் சேவையைத் தொடர்புகொள்ள முடியும்.

சந்தேகத்திற்கிடமான ஊழியர் முகக் கவசமொன்றை அணிந்துகொண்டு தனிமைப்பட வேண்டும் என்பதுடன். வைத்தியசாலைக்கு மாற்றப்படும் வரை நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்புடைய அனைத்து தற்காப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்த நபரின் பரிசோதனை நேர்மறையானதாக காணப்படின், சுகாதார அதிகாரிகள் இந்த இடத்திற்கு வந்து மேலதிக தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்குவர்.

## 3.8 சேவை நிலையத்திலிருந்து மீண்டும் வீட்டுக்கு வந்த பின்பு செய்ய வேண்டியவை.

மீண்டும் வீட்டுக்கு வந்த பின்பு வீட்டினுள் நுழைய முன்னர்,

- சவர்க்காரம் மற்றும் நீரினைக் கொண்டு உங்களது கைகளைக் கழுவுங்கள்.
- ஆடைகள், காலணிகளை அகற்றி, அவற்றை வீட்டுக்கு வெளியே வைக்கவும். அவற்றை வீட்டினுள் எடுக்க முன்பு அல்லது மீண்டும் அணிவதற்கு முன்பு அவற்றைக் கழுவுங்கள்.
- உங்களது அனைத்துப் பொருட்களையும் வீட்டுக்கு வெளியே வைக்கவும். ஏதாவது பொருளை வீட்டினுள் எடுத்துச் செல்வதாயின், சவர்க்காரம் மற்றும் நீரினைப் பயன்படுத்தி அல்லது அற்ககோல் அடங்கியுள்ள தொற்றுதடைத் திரவமொன்று மூலம் அவற்றைக் கழுவுங்கள். (இது உங்களது கையடக்கத் தொலைபேசி, கண்ணாடி, கைக்கடிகாரம் போன்றவற்றுக்கு ஏற்புடையதாகும்.)
- குளித்த பின்னர் மாத்திரம் வீட்டினுள் நுழையுங்கள்.

## 3.9 விடுதிகள், படையினர் தங்குமிடங்கள், துயில் கூடங்கள், தங்குமிடங்கள்

இந்த தங்குமிட வசதிகளைக் கொண்ட இடங்களில் நெரிசலைத் தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும்.

வளாகத்தினுள் நுழையும் அனைவரும் சவர்க்காரம் மற்றும் நீரினைக் கொண்டு இரு கைகளையும் கழுவ வேண்டும். இல்லாவிடின் சுகாதாரப் பாதுகாப்புத் திரவமொன்றைப் பயன்படுத்த வேண்டும்.

காலணிகளை நுழைவு வாயிலுக்கு வெளியே அல்லது குறைந்தபட்சம் அறைக்கு வெளியே வைத்திருக்க வேண்டும்.

சிற்றுண்டியகங்கள் அல்லது உணவகங்களில் நெரிசலைத் தவிர்ப்பதற்காக பல்வேறுபட்ட பிரிவினருக்கு வித்தியாசமான நேரங்களில் உணவினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உணவு அருந்தும் அறைகள் உட்பட அனைத்து பொது இடங்களிலும் நபர்களுக்கிடையே ஒரு மீட்டர் தூரம் பேணப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

சுவாச நோய் அறிகுறிகளுடன் அல்லது அறிகுறிகள் இன்றி காய்ச்சல் உள்ள யாராவது இருப்பின் முகாமைத்துவத்திற்கு அறிவிக்க வேண்டும். காய்ச்சல் உள்ள எந்தவொரு நபரையும் இனங்காண்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். (தயவுசெய்து 3.7 ஆம் பகுதியைப் பார்க்கவும்).

விசேடமாக காழியான அறையொன்று காணப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறான நோய் அறிகுறிகள் உள்ள எந்தவொரு நபரையும் அவ்வாறான நோய் அறிகுறிகள் இனங்காணப்பட்டவுடன், உடனடியாக அவர் இந்த அறையில் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அறிவிப்புப் பலகைகள் மற்றும் ஏனைய ஏற்புடைய இடங்களில் கோவிட் - 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் காட்சிப்படுத்தி, அவற்றைப் பின்பற்றுமாறு வதியும் அனைவரிடமும் கேட்டுகொள்ளவும்.

விருந்தினர்களின் வருகையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

## 3.10 துப்புரவு செய்வதற்கான பணியாட்தொகுதியின் பாதுகாப்பு

துப்புரவு செய்யும் கடமையில் ஈடுபடும்போது அனைத்து பணியாட்தொகுதியினரும் பொருத்தமான பாதுகாப்புக் கருவிகள் அணிந்திருக்க வேண்டும். (முகக் கவசங்கள், ஊடுறுவாத மேலங்கிகள், கையுறைகள் போன்றவை).

அனைத்து சந்திப்பின் பின்னரும் அவர்கள் நன்றாக கைகளைக் கழுவ வேண்டும் அல்லது தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். (ஒவ்வொரு அறை, குளியலறை, முன்னாலுள்ள மேசை, விற்பனைக் கருமபீடம் போன்றவற்றை சுத்தம் செய்த பின்பு)

கோவிட் - 19 சந்தேகத்திற்கிடமான அல்லது உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வுகளின் கழிவுகளை அகற்றுவதில் ஈடுபடும் நபர்கள் முழுமையான பாதுகாப்பு உடைகளை அணிய வேண்டும்.

அவர்கள் எப்போதும் தமக்கு மத்தியில் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேண வேண்டும் என்பதுடன், இந்த பணியாட்தொகுதியின் ஓய்விடங்கள் பொதுவாக நெரிசல் மிகுந்தனவாக காணப்படுகின்றமையினால் முகாமைத்துவம் இது தொடர்பாக தேடிப் பார்க்க வேண்டும்.

அனைத்து சுத்தப்படுத்தல் செயற்பாட்டின் பின்பும் எல்லா உபகரணங்களையும் துணிகளையும் மேலே 3.3 ஆம் பகுதிக்கு ஏற்ப நன்றாகக் கழுவி, தொற்றுநீக்கம் செய்து துணி உலர்த்தும் இந்திரங்கள் மூலம் அல்லது சூடான சூரிய ஒளியில் 30 நிமிடங்கள் உலர்த்த வேண்டும்.

சுத்தம் செய்யும் பணியாட்தொகுதிக்கு கழுவுவதற்கான், குளிப்பதற்கான வசதிகளை வழங்க வேண்டும்.

அவர்களது கடமையின் முக்கியத்துவம், புதிய வழிகாட்டல்கள் மற்றும் சேவை முறைமைகள், அவர்களின் பாதுகாப்பு தொடர்பாக அவர்களை எப்போதும் விழிப்புணர்வூட்ட வேண்டும்.

## 3.11 முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

தேவையின் அடிப்படையில், கையுறைகள், மூக்குக் கண்ணாடிகள், அங்கிகள் அல்லது மேலங்கிகள் (பொருத்தமான

சந்தர்ப்பங்களில்) போன்ற பாதுகாப்பு உபகரணங்களை (PPE) ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் என்பதுடன், விதந்துரைகளுக்கு ஏற்ப அவற்றை அணிவதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

அங்கே உள்ள அனைத்து ஊழியர்களும் தொழிற்சாலையில் நிரந்தரமான அல்லது கண்டறிய முடியுமான பணியாட்தொகுதியாக இருக்க வேண்டும். அவர்களது பெயர்கள், முகவரிகளை ஏடொன்றில் பதிந்து வைத்திருக்க வேண்டும். இந்தக் காலப்பகுதியில் தற்காலிக ஊழியர்களைச் சேவையில் ஈடுபடுத்துவதை விட்டும் தவிர்ந்துகொள்ளுங்கள்.

சேவை நிலையங்களிலும் காற்றுச் சுத்திகரிப்புக் கருவிகளை நிறுவ முடியுமான இடங்களிலும் காற்றோட்டத்தை மேம்படுத்துங்கள். காற்றுச் சீராக்கிகள் பயன்படுத்தப்படாத இடங்களில் கதவுகளைத் திறந்து வைக்கவும்.

பாரியளவிலான ஒன்றுகூடல்களைக் கட்டுப்படுத்துங்கள். நேர்முக கூட்டங்களை முடிந்தளவு குறைத்துக்கொள்ளுங்கள். காணொளி மாநாடு போன்ற மாற்றுத் தொடர்பாடல் முறைமைகள் விதந்துரைக்கப்படுகின்றன.

நேர்முகக் கூட்டமொன்று அத்தியாவசியமானதாயின், பங்குபற்றுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கவும். பங்குபற்றும் அனைவருக்கும் திசுக்கள், சுகாதாரப் பாதுகாப்புத் திரவங்கள் உள்ளிட்ட போதிய வழங்கல் மற்றும் பொருட்களை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுங்கள்.

பௌதீகத் தொடர்புகளைக் குறைத்துக்கொள்வதற்காக சேவை வழங்கலில் பல்வேறுபட்ட முறைமைகளைப் (மின்னஞ்சல், தொலைபேசி அழைப்பு ஊடாக) பயன்படுத்த வேண்டும்.

அனைத்து முகக் கவசங்கள், கையுறைகள், தலைக் கவசங்கள் போன்றவற்றை மீண்டும் பயன்படுத்தக் கூடாது.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டல்களுக்கு (கோவிட் - 19 பரவல் காரணமாக சுய தனிமைப்படுத்தலின் கீழ் குடும்பங்கள் மற்றும் இடங்களில் சேரும் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவத்திற்கான இடைக்கால வழிகாட்டல்) ஏற்ப முகாமைத்துவம் செய்ய வேண்டும் என சந்தேகிக்கும் நபர்களின் கழிவுப்பொருட்கள் தவிர, வழமையாக பின்பற்றப்படும் வழிகாட்டல்களுக்கு ஏற்ப கழிவுப்பொருட்களை அகற்ற வேண்டும். அனைத்து சுத்தப்படுத்தல் பணியாட்தொகுதியினருக்கும் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவத்தின் சரியான ஒழுங்குமுறைகள் தொடர்பான பயிற்சியை வழங்க வேண்டும். தொழில்சார் கையுறைகள் உட்பட பொருத்தமான பாதுகாப்பு உபகரணங்களை (PPE) அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதுடன், சவர்க்காரம், நீரினைப் பயன்படுத்தி கைகளைக் கழுவுவதற்குப் போதிய வசதிகளை வழங்க வேண்டும்.

அனைத்து மலசலகூடங்களையும் சுகாதாரப் பாதுகாப்புடன் பராமரிக்க வேண்டும். மலசலகூட அலகினுள் நுழையும் பிரதான வாயிலைத் திறந்து வைத்திருக்க வேண்டும். மலசலகூடத்திற்கு வெளியே கை கழுவுவதற்காக சவர்க்காரம் மற்றும் நீருடன் கை கழுவுவதற்கான வசதிகளை வழங்க வேண்டும். 3.3 ஆம் பகுதியில் குறிப்பிட்டுள்ளவாறு மலசலகூடங்களின் கதவுகளை சுத்தம் செய்து தொற்றுநீக்கம் செய்ய வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

கோவிட் – 19 தொற்று, ஆபத்துக் காரணிகள் மற்றும் பாதுகாப்பான நடத்தைகள் (உதா - இருமல் ஏற்படும்போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புப் பொருட்களைக் கவனமாகப் பயன்படுத்தல் மற்றும் இந்த ஆவணத்தின் 3.2 ஆம் பகுதியின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்) தொடர்பாக அனைத்து ஊழியர்களையும் விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சியளித்தல்.

வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்புடையவாறு ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக சுவரொட்டிகள் மற்றும் சுகாதார கல்விச் செய்திகளைக் காட்சிப்படுத்த வேண்டும்.

# 4. விசேட அமைப்புகளுக்கான வழிகாட்டல்கள்

## 4.1 உற்பத்திக் கைத்தொழில்கள்

மேலே 3 ஆம் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள பொதுவான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கோவிட் - 19 தொற்று பரவலைத் தடுத்தல் / கட்டுப்படுத்தல் மற்றும் பொதுமக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு தொழிற்சாலைகளில் பின்பற்ற வேண்டிய அம்சங்கள் ஆவணத்தின் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**சேவை நிலையங்களை மறுசீரமைத்தல்**

1. அத்தியாவசிய செயன்முறைகளுடன் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல், நெகிழ்ச்சியான சேவை நேரம், தொழிற்சாலையினுள் தேவையான பௌதீக இடைவெளியைப் பேணுவதற்கான அலுவலக அமைப்புகள் போன்ற கொள்கைகள் மற்றும் பயன்பாடுகளை முகாமைத்துவம் மீளாய்வு செய்ய வேண்டும்.

2. வழங்கப்பட்டுள்ள நேரத்தில் சேவை நிலையத்தில் உள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கின்ற மாற்றுத் தினங்கள் அல்லது மேலதிக சேவை நேரங்களை ஏற்படுத்தல், அது ஒருவரை விட்டும் ஒருவர் தூரமாக இருப்பதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்கும்.

3. ஊழியர்கள் மத்தியில் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணும் வகையில் வேலை அமைப்புகளைத் தயாரிக்க வேண்டும்.

## 4.2 அரச மற்றும் தனியார் அலுவலகங்கள்

மேலே 3 ஆம் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ள பொது நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பின்வரும் அம்சங்களைப் பின்பற்ற வேண்டும்.

**சேவை நிலையத்தை மறுசீரமைத்தல்**

அத்தியாவசிய செயன்முறைகளுடன் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல், நெகிழ்ச்சியான சேவை நேரம் (உதா – ஒழுங்கு குலைந்த சேவை நேரம்) சமூக இடைவெளி மூலோபாயத்திற்கு அவசியமான பௌதீகத் தூரத்தை அதிகரித்தல் போன்ற கொள்கைகள் மற்றும் பயன்பாடுகளைப் பணியமர்த்துவோர் ஏற்படுத்த வேண்டும்.

வழங்கப்பட்டுள்ள நேரத்தில் சேவை நிலையத்தில் உள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கின்ற மாற்றுத் தினங்கள் அல்லது மேலதிக சேவை நேரங்களை ஏற்படுத்துவது அவர்கள் ஒருவரை விட்டும் ஒருவர் தூரமாக இருப்பதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்கும்.

ஊழியர்கள் மத்தியில் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணும் வகையில் சேவை நிலையங்களைத் தயார்படுத்த வேண்டும்.

**சேவை நிலையத்தின் நுழைவாயில் அருகே**

வளாகத்தினுள் நுழையும் அனைவரும் (விருந்தினர்கள் மற்றும் பணியாட்தொகுதி) அவ்வாறு நுழைவதற்கு முன்னர் சவர்க்காரம் மற்றும் நீரினைப் பயன்படுத்தி அவர்களின் கைகளைக் கழுவ வேண்டும்.

சேவை நிலையத்தினுள் நுழையும்போது பணியாட்தொகுதியினரின் உடல் வெப்பநிலையைப் பரிசோதிக்கவும். 98.4 $^0$F அல்லது 37 $^0$C க்கு மேற்பட்ட வெப்பநிலை பதியப்படும் எந்தவொரு நபரையும் 10-15 நிமிட இடைவேளையின் பின்பு மீண்டும் பரிசோதிக்க வேண்டும் என்பதுடன், இரண்டாவது பரிசோதனையின்போது நேர்மறையானதாக காணப்படின் அவர் திருப்பி அனுப்பப்படுவார்.

நுழைவாயில் அருகே வரிசையில் நிற்கும்போது ஊழியர்கள் மத்தியில் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணவும்.

### சேவை நிலையத்தினுள்

அனைத்து ஊழியர்களும் கடமையில் ஈடுபட்டிருக்கும்போது முகக் கவசங்களை அணிய வேண்டும் என்பதுடன், நபர்கள், பணியாட்தொகுதி மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்வோருக்கிடையில் குறைந்தபட்சம் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேண வேண்டும்.

முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் ஏனைய ஊழியர்களின் மேசைகள் / சேவை நிலையங்கள், பொது தொலைபேசிகள், பெக்ஸ் இயந்திரங்கள், ஏனைய சேவைக் கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டாம் என ஊழியர்களை அறிவுறுத்தவும்.

உதவியாளர்களுடன் நேரடி வாய்மூலத் தொடர்பாடலைக் குறைப்பதற்கு மற்றும் அதற்கு மாற்று வழிமுறைகளைப் (பொதுத் தொலைபேசி அமைப்பு, உள்ளகத் தொலைபேசி நீட்டிப்பு போன்ற) பயன்படுத்துமாறு பணியாட்தொகுதிக்கு அறிவுறுத்தல் வழங்கவும்.

ஊழியர்கள் அநாவசியமக கதவுகளைத் தொடுவதைத் தவிர்ப்பதற்கு பிரிவுகளுக்கிடையே கதவுகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும்.

வேலை செய்யும் சூழலை எப்போதும் கூட்டி சுத்தப்படுத்தல், மேற்பரப்புகள், உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்களை சுத்தம் செய்தல் மற்றும் தொற்றுநீக்கம் செய்தல் உட்பட தூய்மையாக்கல் நடைமுறைகளைத் தினமும் பேணிச் செல்லவும். (மேலே 3.2 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

உணவருந்தும் அறையினுள் நெரிசலைத் தவிர்ப்பதற்கு பகலுணவு மற்றும் தேநீர் ஓய்வினைக் குழுரீதியாக வழங்க வேண்டும். (தயவுசெய்து உணவருந்தும் அறையில் / சிற்றுண்டியகத்தில் பின்பற்ற வேண்டிய விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைகளுக்குப் பொது வழிகாட்டலைப் பார்க்கவும்)

### வாடிக்கையாளர்கள்/ விருந்தினர்களுக்கான அறிவுறுத்தல்கள்

அரச மற்றும் தனியார் அலுவலகங்களுக்கு சமூகமளிக்கும் அனைத்து கொடுக்கல் வாங்கல் செய்வோரும் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும் என்பதுடன், அடுத்த கொடுக்கல் வாங்கல் செய்வோரிடமிருந்து / பணியாட் தொகுதியிலிருந்து 1 மீட்டர் இடைவெளியைப் பேணிக்கொள்ள வேண்டும். அனைத்து விருந்தினருடனும் வேலைகளை முடித்த பின்பு தொற்றுநீக்கலுக்காக பணியாட்தொகுதியினர் கைகளைக் கழுவ சவர்க்காரம் மற்றும் நீர் அல்லது சுகாதாரப் பாதுகாப்பான திரவமொன்றைப் பயன்படுத்த வேண்டும். பணியமர்த்துவோர் இரண்டு கைகளிலும் தொற்றுநீக்கலுக்குத் தேவையான வசதிகளை வழங்க வேண்டும்.

அச்சிடப்பட்ட, டிஜிட்டல் அல்லது காணொளிச் செய்திகள் மூலம் அலுவலகத்தினுள் செயற்படுத்தப்படும் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பாக கொடுக்கல் வாங்கல் செய்வோரை விழிப்புணர்வூட்ட வேண்டும்.

## 4.3 உபசரணைத் துறை

மேலே 3 ஆவது பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள பொதுவான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பின்வரும் அம்சங்களைப் பின்பற்ற வேண்டும்.

### 4.3.1. பொதுவான நடவடிக்கைகள்

கை குலுக்குவதற்குப் பதிலாக எப்போதும் இலங்கையின் "வணக்கம்" (ஆயுபோவன்) எனும் சம்பிரதாயபூர்வ வாழ்த்தினைப் பயன்படுத்தவும்.

பணியாட்தொகுதியைச் சேர்ந்த அனைவரும் கடமையில் ஈடுபட்டிருக்கும்போது முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும்.

விருந்தினர்களை சந்தித்த பின்பு அனைத்து சேவைப் பிரதேசங்களிலும் எல்லா தளபாடங்களையும் தொற்றுநீக்கம் செய்யுங்கள். உதா – தினமும் சுத்தப்படுத்தலுக்கு மேலதிகமாக மேசை, கதிரை, சேவைக் கருமபீடங்களின் மேற்பரப்பு போன்றன. (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

அனைத்து சேவைப் பிரதேசங்களிலும் உள்ள விருந்தினர்களின் தொடுகை இடங்களை முயுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் தொற்றுநீக்கம் செய்யுங்கள். (குறைந்தபட்சம் ஒரு நாளில் 4 தடவைகள்). உதா – பொதுவான சுத்தப்படுத்தலுக்கு மேலதிகமாக கதவு கைப்பிடிகள் மற்றும் பூட்டுகள், தொலைபேசி வாங்கிகள், மின்தூக்கியின் சாவிப் பலகை போன்றன. (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

### 4.3.2. விருந்தினர் சேவைகள்

பரிசோதித்து, நுழைவினை அனுமதிக்கும்போது அனைத்து விருந்தினர்களினதும் வெப்பநிலையைப் பரிசோதிக்கவும். வெப்பநிலை 37 $^0$C அல்லது 98.4 $^0$F க்கு மேற்பட்டதாயின் (தயவுசெய்து 3.2 ஆம் பகுதியைப் பார்க்கவும்)

பதிவு செய்த அட்டையுடன் மாதிரிப் பத்திரம் மூலம் பிறந்த நாடு, விமானம் எது, ஆசன இலக்கம், இலங்கைக்கு வருகை தந்த திகதி, கடந்த 3 வாரங்களினுள் அவர்கள் தொற்றுள்ள நாடுகளுக்குச் சென்றுள்ளார்களா, அடுத்து செல்லுமிடம் போன்ற மேலதிக தகவல்களை நிரப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விருந்தினர்களுக்கு காய்ச்சல் இருப்பின் (சுவாச நோய் அறிகுறிகளுடன் அல்லது அறிகுறிகள் இன்றி) முன்னாலுள்ள சேவை மேசைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கவும்.

முன்னாலுள்ள மேசையில் சேவை வழங்குவோர் மேலே 3.7 ஆம் பகுதியிலுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

எல்லா அறைகளுக்கும் கோவிட் - 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து குறிப்பான அறிவுறுத்தல்கள் / தகவல்கள் பத்திரமொன்றை அல்லது விசேட தகவல் பத்திரமொன்றை வழங்க வேண்டும்.

ஹோட்டலில் பொது இடங்களிலுள்ள கைத் தொடுகை இடங்களை ஒவ்வொரு 4 மணத்தியாலங்களுக்கும் ஒரு தடவை தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். அதாவது: விருந்தினர்களின் மீன்தூக்கி பொத்தான்கள், பொது மலசலகூட கதவுகள், நீர்க் குழாய்கள், சவர்க்காரம் வழங்கிகள் போன்றவை. (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

### 4.3.3. விருந்தினர் அறை

அனைத்து விருந்தினர் அறைகளிலும் காணப்படும் தொலைக்காட்சி தொலையியக்கியை இலகுவாக தொற்றுநீக்கம் செய்ய முடியுமான வகையில் பொலித்தீன் கவசமிட வேண்டும்.

வழக்கமான சுத்தப்படுத்தலுக்கு மேலதிகமாக மேசை, கதிரைகள், கதவுப் பூட்டுகள், தொலைக்காட்சி வாங்கிகள், நீர்க் குழாய்கள் போன்ற ஏனைய தொடுகை இடங்களைத் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

அனைத்து விருந்தினர் சாவி அட்டைகளையும் வழங்குவதற்கு முன்பாக தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.

### 4.3.4. ஹோட்டலினுள் காணப்படும் அலுவலகங்கள் (தயவுசெய்து 3 ஆம் பிரிவைப் பார்க்கவும்)

### 4.3.5. சமையலறை மற்றும் உணவுச் சேவை

அனைத்து சமையல்காரர்கள் மற்றும் ஏனைய உதவிப் பணியாட்தொகுதியினரும் உணவு சம்பந்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள முன்பாக கைகளைக் கழுவ வேண்டும்.

அனைத்து பச்சையான பழங்கள் மற்றும் மரக்கறிகளையும் தயார் செய்வதற்கு முன்னர் நன்றாகக் கழுவுங்கள்.

உண்பதற்குத் தயாரான உணவுகளைக் கையாளும்போது கையுறைகள் அல்லது பற்றுக்குறடுகளைப் பயன்படுத்தவும்.

எல்லா சந்திப்புக்கு முன்னரும் உணவு தயாரித்த மேசை, வெட்டுப் பலகை, கத்தி, குறடு போன்ற நேரடி தொடுகை மேற்பரப்புகளைத் தொற்றுநீக்கம் செய்யவும். (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

களஞ்சியப்படுத்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்தல் மற்றும் எடுத்துச் செல்லும்போது அனைத்து உணவுகளையும் மூடி, முத்திரையிடவும்.

விருந்தினர்களின் மூலம் உணவுகள் மாசுபடுவதைத் தவிர்ப்பதற்கு புபேயில் உள்ள அனைத்து உணவுகளையும் மூடி வைக்க வேண்டும்.

புபேயில் உணவுகளை வழங்குவதற்குப் போதியளவு நபர்களை ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும். அனைத்து விருந்தினர்களுக்கும் (கரண்டி, முள்கரண்டி போன்ற) ஒரே உபகரணத்தைப் பயன்படுத்த இடமளிக்க வேண்டாம். மாற்றீடாக அனைத்து விருந்தினர்களுக்கும் புபே சேவையை வழங்க முன்னர் கைகளைக் கழுவுவதை அல்லது தொற்றுநீக்கம் செய்வதை உறுதிப்படுத்தவும். புபேகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்களை அடிக்கடி மாற்றவும். கரண்டி, முள்கரண்டி, கத்தி போன்றவற்றை உறையொன்றில் இட வேண்டும்.

சுத்தம் செய்யும் பணியாட்தொகுதி மற்றும் தூய்மைப்படுத்தும் பெண்கள் விசேடமாக முகக் கவசம், கையுறை மற்றும் ஏனைய தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்துவதை கடுமையாக நடைமுறைப்படுத்தவும்.

### 4.3.6. முகாமைத்துவத்திற்கு

அன்றாட சுருக்க விளக்கம், சுவரொட்டிகள், டிஜிட்டல் முன்வைப்புகள் ஊடாக பணியாட்தொகுதியின் மத்தியில் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஊக்குவிக்கவும்.

உணவு தயாரிக்கும்போது குறுக்கு மாசடைதலைக் குறைப்பதற்காக உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் தொடர்பாக அன்றாடம் விளக்கமளிக்கவும். பணியாட்தொகுதியின் பாவனைக்காக கை கழுவும் வசதிகள் அல்லது சுகாதாரப் பாதுகாப்புத் திரவங்கள் எல்லா இடத்திலும் இருக்க வேண்டும்.

விருந்தினர்களின் ஒத்துழைப்பு மற்றும் இணக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காக உங்களது அமைப்பு பின்பற்றியுள்ள விசேட கோவிட் - 19 தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அச்சிடப்பட்ட, காணொளிச் செய்திகளைத் தயாரிக்கவும்.

**கோவிட் - 19 தொற்றியுள்ளதாக சந்தேகிக்கப்படும் நபரொருவரின் கழிவுப் பொருட்களை அகற்றுதல்**

சந்தேகத்திற்குரிய அல்லது உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வொன்றில் உள்ள அனைத்து சாதாரண மற்றும் ஏனைய கழிவுபொருட்களை எரிக்கும்போது அல்லது அகற்றும்போது தயவுசெய்து சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டல்களைப் (கோவிட் - 19 பரவல் காரணமாக சுய தனிமைப்படுத்தலின் கீழ் குடும்பங்கள் அல்லது இடங்களில் சேரும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான இடைக்கால வழிகாட்டல்) பின்பற்றவும்.

**கோவிட் - 19 தொற்றியுள்ளதாக சந்தேகிக்கப்படும் நபரொருவரின் ஆடைகளைக் கையாளுதல்**

கோவிட் - 19 தொற்றியுள்ளதாக சந்தேகிக்கப்படும் நபர் பயன்படுத்தும் அனைத்து ஆடைகளையும் வெவ்வேறாக ஒன்றுசேர்த்து முத்திரையிடப்பட்ட பையொன்றில் இட்டு 72 மணித்தியாலங்கள் வைத்திருக்க வேண்டும் என்பதுடன், அந்த நபரின் பரிசோதனைப் பெறுபேறு எதிர்மறையானது எனில், ஆடைகளைப் பொதுவான முறையைப் பயன்படுத்தி கழுவுதற்காக அனுப்பி வைக்கப்படும். கோவிட் - 19 நேர்மறை எனில் அனைத்து ஆடைகளையும் எரித்து விட வேண்டும். இந்தப் பொருட்களைக் கையாளும் அனைத்து நபர்களும் என்95 முகக் கவசங்கள், கண் கவசங்கள், முழு உடலுக்குமான கவசங்கள், கையுறைகளை அணிய வேண்டும் என்பதுடன் அவற்றைப் பயன்படுத்திய பின்பு எரித்து விட வேண்டும்.

#### 4.3.7. சேவைக் கருமபீடங்கள் 3.4 ஆம் பகுதியைப் பார்க்கவும்

#### 4.3.8. பணியாட்தொகுதி தங்கும் விடுதி 3.9 ஆம் பகுதியைப் பார்க்கவும்

#### 4.3.9. ஏனையவை

விருந்தினரின் பயணப் பொதிகளைக் கையாண்ட பின்பு உடனடியாக குறித்த பொறுப்பான குழுவினர் தமது கைகளைத் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். நீச்சல் தடாகங்கள் மற்றும் ஸ்பா சேவைகளில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்பதால், இந்த சேவைகள் வழங்கப்படுவது விதந்துரைக்கப்படவில்லை. மேற்குறிப்பிட்ட அடிப்படையான வழிகாட்டல்களுக்கு ஏற்ப உடற்பயிற்சி நிலையங்களைத் திறந்து வைத்திருக்க முடியும் என்பதுடன், பாவனையாளர்களுக்கிடையே அனைத்து உபகரணங்களையும் தொற்றுநீக்கம் செய்து பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: இங்கே பட்டியலிடப்படாத எந்தவொரு துறையும் 3 ஆவது அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ள பொதுவான வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும்.

### 4.4 உணவு விடுதிகள் மற்றும் உணவகங்கள்

மேலே 3 ஆவது பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள பொதுவான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பின்வரும் அம்சங்களைப் பின்பற்ற வேண்டும்.

அனைத்துப் பாவனையின் பின்பும் மேசைகள் மற்றும் கதிரைகளின் அனைத்து மேற்பரப்புகளும் தொற்றுநீக்கம் செய்யப்பட வேண்டும். (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

அனைத்து ஊழியர்கள் மற்றும் நுகர்வோர் உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகளினுள் குறைந்தபட்சம் 1 மீட்டர் இடைவெளியைப் பேண வேண்டும். தளபாடங்களை அதற்கு ஏற்ப ஒழுங்குபடுத்த வேண்டும்.

அனைத்து ஊழியர்களும் முகக் கவசங்களை அணிய வேண்டும்.

தொலைக்காட்சித் திரை, காட்சிப் பலகை அல்லது மேசைக் கண்ணாடியின் கீழ் உணவுப் பட்டியலைக் காட்சிப்படுத்தவும்.

புபே சேவையைப் பெற்றுக்கொள்ள முடியுமான இடங்களில், பெரும்பாலான கொடுக்கல் வாங்கல் செய்வோர் புபேயில் கரண்டிகள் மற்றும் ஏனைய உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக உணவு வழங்கலுக்கு ஒதுக்கப்பட்ட தனியான பணியாட்தொகுதி ஊழியர்கள் இருக்க வேண்டும்.

நுகர்வோர் பீங்கான் கோப்பைகள் மற்றும் சமையல் பாத்திரங்களைப் பரிமாறிக்கொள்ளக் கூடாது.

அனைத்து சுத்தப்படுத்தல் பணியாட்தொகுதியினரும் கையுறைகள் மற்றும் முகக் கவசங்களை அணிய வேண்டும்.

குறுக்கு மாசடைதலைத் தவிர்ப்பதற்காக உணவக ஊழியர்கள் எப்போதும் தமது கைகளைக் கழுவ வேண்டும்.

சமையல் பாத்திரங்கள் மற்றும் பீங்கான் கோப்பைகளை சவர்க்காரம் மற்றும் நீரினைப் பயன்படுத்திக் கழுவ வேண்டும்.

**கொடுப்பனவுக் கருமபீடத்திற்குத் தயவுசெய்து மேலே 3.4 ஆம் பகுதியைப் பார்க்கவும்.**

## 4.5 பல்பொருள் பேரங்காடிகள்

மேலே 3 ஆவது பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள பொதுவான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பின்வரும் அம்சங்களைப் பின்பற்ற வேண்டும்.

- நுழைவாயிலில் காலினால் அல்லது முழங்கையினால் இயக்கப்படும் நீர்க்குழாய் மூலம் கைகளைக் கழுவும் வசதிகளை வழங்கி, ஒவ்வொரு வாடிக்கையாளரும் நுழைவதற்கு முன்பாக கைகளைக் கழுவுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- பல்பொருள் பேரங்காடியைத் திறப்பதற்கு முன்னர் நிலப்பகுதி, கருமபீடத்தின் மேற்பரப்பு மற்றும் அனைத்து பொதுவான தொடுகை மேற்பரப்புகளையும் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்)
- நுழைவு, வெளியேறல் வாயில்களைத் திறந்து வைக்கவும். அல்லது கதவுகளைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் ஒதுக்கப்பட்ட நபர்களை வைத்திருக்கவும்.
- வரிசை உட்பட வியாபார நிலையத்தினுள் இரண்டு நபர்களுக்கிடையே 1 மீட்டர் இடைவெளியைப் பேணுவதற்காக பெயரிடப்பட்ட எண்ணிக்கையிலான கொடுக்கல் வாங்கல் செய்வோரை மாத்திரம் உள்ளே அனுமதிக்கவும்.
- முகக் கவசம் அணியாத வாடிக்கையாளர்களை அனுமதிக்க வேண்டாம்.
- வேலை செய்யும் காலப்பகுதியில் அத்தியாவசியமற்ற துணைப்பொருட்கள்/ நகைகளை (கைக்கடிகாரம், காப்பு, தங்க ஆபரணங்கள் போன்றவை) அணிய வேண்டாம் என அறிவுறுத்தவும்.
- அனைத்துப் பாவனையின் பின்பும் பொருள் தள்ளுவண்டிகள், கூடைகளின் கைப்பிடிகளைத் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.
- பாரம் நிறுப்பதற்கான இயந்திரங்களை அதற்கென ஒதுக்கப்பட்ட பணியாட்தொகுதி ஊழியர்கள் மாத்திரமே செயற்படுத்த வேண்டும்.
- பொதி செய்யப்படாத பொதுவான சில்லறைப் பொருட்களை (அரிசி, பருப்பு போன்றவை) விற்பனை செய்வதைத் தவிர்ந்துகொள்ளவும்.
- வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளும் எல்லா சந்திப்பின் பின்பும் கைகளைத் தொற்றுநீக்கம் செய்யுமாறு காசாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது.
- தயவுசெய்து 3.4 ஆம் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள கருமபீட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
- கடதாசி விலைப்பட்டியலொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான அல்லது விலைப்பட்டியலை மின்னஞ்சல் மூலம் கையடக்கத் தொலைபேசிக்கு பெற்றுக்கொள்வதற்கான தெரிவு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.
- கடுகதி கருமபீடங்களைப் பேணிச் செல்லவும். (5 பொருட்களுக்கு குறைவான).
- இந்த நோய்ப் பரவல் காலப்பகுதியில் பல்பொருள் பேரங்காடி கருமபீடங்கள் ஊடாக பயன்பாட்டு விலைப்பட்டியல்களைச் செலுத்துவது இடைநிறுத்தப்படுகிறது.
- வாடிக்கையாளரினால் இயக்கப்படும் அனைத்து சாதனங்களையும் அகற்றவும். (உதா – காசாளர் அருகே காணப்படும் தொடு திரை)
- அச்சு, டிஜிட்டல் மற்றும் கேட்பொலி ஊடகங்கள் மூலம் நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரச் செய்திகள் தொடர்பாக வாடிக்கையாளர்களை விழிப்புணர்வூட்டவும்.

- அரிசி, தேங்காய், உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற பொதுவாக விற்பனையாகும் பொருட்களுக்காக பிரதான சந்தைக்கு வெளியே தனியான சிறிய கூடங்களை அமைக்குமாறு விதந்துரைக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை மூலம் பிரதான மண்டபத்தினுள் நெரிசலைக் குறைக்க முடியும்.

## 4.6 பொதுப் போக்குவரத்து

மேலே 3 ஆவது பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள பொதுவான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பின்வரும் அம்சங்களைப் பின்பற்ற வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் புகையிரதம் உட்பட அனைத்து பொதுப் போக்குவரத்துகளுக்கும் ஏற்புடையனவாகும்.

பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர்

- எல்லா பயணங்களையும் ஆரம்பிக்க முன்னர் நுழையும் இடங்கள் உட்பட வாகனத்தின் உட்பகுதியைத் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)
- சாரதி, நடத்துனர்/ உதவியாளர் / அனைத்து புகையிரத பணியாட்தொகுதியினர் மற்றும் அனைத்துப் பயணிகளும் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும்.
- பயணிகளுக்கிடையில் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேண வேண்டும் என்பதுடன், ஆசனக் கொள்திறனில் 50% வரை பயணிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும். வாடகை வண்டிச் சேவைகள் மோட்டார் வண்டிகள் மற்றும் முச்சக்கரவண்டிகளில் அதிகபட்சம் இரண்டு பயணிகளை அழைத்துச் செல்ல வேண்டும்.
- பணப் பாவனையைக் குறைக்கவும், கட்டணங்களுக்காக குறிப்பான தொகையை எடுத்து வருமாறு பயணிகளை ஊக்குவிக்கவும்.
- வாகனம்/ பஸ் தரிப்பிடம்/ புகையிரத நிலையத்திற்கு நுழையும் இடங்களில் கை சுத்திகரிப்பான் / அற்ககோல் துடைப்புக் கருவிகளைப் பொருத்த முடியும்.
- புகையிரத நிலையங்களில் உள்ள அனைத்து பயணிகளின் தொடுகை இடங்களையும் அன்றாடம் தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.
- 3 ஆவது அத்தியாயத்தின் அறிவுறுத்தல்கள் அலுவலகச் சூழலுக்கும், சேவைக் கருமபீடங்கள் மற்றும் டிக்கட் வழங்கும் இடங்களுக்கும் ஏற்புடையனவாகும்.

**பயணத்தின்போது**

- வாகனத்தில் நுழையும்போது / பயணத்தின்போது தொடுகையற்ற நுட்பத்தைப் பழகும் வகையில் வாகனத்தில் ஏறுவதற்கும் அதிலிருந்து இறங்குவதற்கும் போதுமான நேரத்தை வழங்கவும்.
- பயணிகளை ஏற்றுவதற்கு இனங்காணப்பட்ட ஒரு கதவினைப் பயன்படுத்த வேண்டும்.
- வாகனத்தின் உள்ளே காணப்படும் பொது அழைப்பு முறைமை ஊடாக சுகாதார ஊக்குவிப்புச் செய்திகள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட நடத்தைகளை அறியப்படுத்த வேண்டும்.

## 4.7 உபசரணை நிகழ்வுகள் (திருமண நிகழ்வு, இறுதிச் சடங்குகள், விருந்துபசாரங்கள்)

மேலே 3 ஆவது அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ள பொதுவான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பின்வரும் அம்சங்களைப் பின்பற்ற வேண்டும். முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் அனைத்து திட்டமிட்ட நிகழ்வுகளையும், கூட்டங்களையும் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

வைபவத்திற்கு முன்னர் அனைத்து தளபாடங்கள் உட்பட விழா மண்டபம் / விருந்தினர் அறையை சுத்தம் செய்து தொற்றுநீக்கம் செய்ய வேண்டும். (தயவுசெய்து 3.3 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

நுழைவாயிலில் நுழையும்போது காலினால் அல்லது முழங்கையினால் இயக்கப்படும் நீர்க்குழாயினால் கைகளைக் கழுவும் வசதியை வழங்க வேண்டும். ஒவ்வொருவரும் நுழைய முன்பு கைகளைக் கழுவுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விழா மண்டபம் / விருந்தினர் அறையினுள் நுழையும் அனைத்து நபர்களினதும் உடல் வெப்பநிலையைப் பரிசோதிக்குமாறு விதந்துரைக்கப்படுகிறது.

விருந்தினர்கள் எப்போதும் குறைந்தபட்சம் 1 மீட்டர் இடைவெளியைப் பேண வேண்டும்.

விழா மண்டபம் / விருந்தினர் அறையில் போதிய காற்றோட்டம் உள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். திறந்த இடமாக இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

கோவிட் கட்டுப்பாட்டுச் செய்திகள் மற்றும் விருந்தினர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஒழுங்குமுறைகளை விழா மண்டபத்தின் / விருந்தினர் அறையின் நுழைவாயிலில் காட்சிப்படுத்த வேண்டும்.

